தெடுக்க ஒரு குழு அமைக்கப்பட்டு, அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அந்த முறையில் இந்த ஆண்டு 10 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். இது தவிர, மாவட்டந்தோறும் தமிழில் திறமை பெற்றவர்களுக்கு அவர்களின் தமிழ் ஆர்வத்தை ஊக்குவிக்கும் பொருட்டு இரண்டு பரிசுகள் சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகின்றன.

தனியார் பள்ளிகள்

*649 வினு—திரு. எம். முத்தையா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா?

1971-ம் ஆண்டு எத்தனே, எந்தெந்த தனியார் பள்ளிகளே அரசு ஏற்று நடத்தும் செயற்குறிப்புள்ளது—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கீழ்க்கண்ட 3 உதவி பெறும் பள்ளிகளின் நிர்வாகத்தினர் தங்கள் உயர்நிலைப்பள்ளிகளே அரசு ஏற்று நடத்தும்படி கேட்டுள்ளனர்:—

1. இந்து உயர்நிலைப்பள்ளி, காளாம்பட்டி, நெல்லை மாவட்டம்.
2. கன்யா குருகுலம் வாசுகி பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருவொற்றியூர், செங்கை மாவட்டம்.
3. பாரதி நாராயணசுவாமி உயர்நிலைப்பள்ளி, சில்லமரத்துப்பட்டி மதுரை மாவட்டம்.

இக் கோரிக்கைகள் பரிசீலனையில் உள்ளன.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே. அரசு ஏற்று நடத்த இருக்கின்ற பள்ளிகளில், காளாம்பட்டி பள்ளியை இந்த ஆண்டே எடுத்து நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே நிர்வாகத்தினர் அரசைக் கேட்டிருக்கிறார்கள். அரசு அதுபற்றிய விபரங் களை தெரிவிக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குனரைக் கேட்டிருக்கிறது. அவர்கள் மாவட்ட தலைமை கல்வி அதிகாரியைக் கேட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டுக்குள்ளேயே முழு விபரமும் தெரிந்துவிட்டால், இந்த ஆண்டே ஏற்று நடத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

மெக்காவாய் உயர்நிலை ஆரம்பப்பள்ளி

* 650 வினு—திரு. எம் முத்தையா : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஒட்டப்பிடாரம் மெக்காவாய் உயர் நிலை ஆரம்பப்பள்ளி நிர்வாகியால் நடத்தப்பட்டு வரும் ஹாஸ்டலில் உணவு,உடை விஷயமாக ஊழல் என்று மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சமீபத்தில் தணிக்கை செய்தாரா ?